செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-49 ஜனவரி, 2025



அனைவருக்கும் *புத்தாண்டு* மற்றும்
பொங்கல் நல் வாழ்த்துக்கள்



உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் (WFTU) தலைவர் தோழர் ஜார்ஜ் மவ்ரிகோஸ் சென்னை AIBEA மத்திய அலுவலகம் வருகை

1945ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (WFTU) தனது எண்பதாவது ஆண்டு நிறைவினை இவ்வருடம் 2025ல் சிறப்புற அனுசரிக்க உள்ளது.

கடந்த எண்பது ஆண்டு காலமாக உலகெங்கிலுமுள்ள தொழிலாளர்களின் உரிமைகளுக்காகவும், சமூக முன்னேற்றத்திற்காகவும், அனைத்து வகையான மனிதகுல பாகுபாடுகளுக்கு எதிராகவும், போர் மற்றும் ஏகாதிபத்திய தலையீடுகளை எதிர்த்தும் இடைவிடாத நடவடிக்கைகளை WFTU முன்னெடுத்து செயலாற்றி வருகின்றது.



உலகத் தொழிலாளரிடையே ஒன்றுபட்ட வர்க்க உணர்வுடன் உலகளாவிய ஏகாதிபத்தியத்தினை தொடர்ச்சியாக கடந்த எண்பது ஆண்டு காலமாக சர்வதேசிய அளவில் உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் கடுமையாக எதிர்த்து வருகின்றது.

தொழிலாளர்களுடைய உரிமைகள் பறிக்கப்படும் சூழ்நிலை, முதலாளித்துவ சக்திகளின் நெருக்கடிகளின் விளைவாக ஏற்பட்டுள்ள சமூக சமத்துவமின்மைகள், ஜனநாயகம் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் மீதான கடுமையான தாக்குதல்கள் ஆகியவற்றால் தொழிலாளர்கள் உலகெங்கிலும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள தற்போதைய கடினமான சூழ்நிலையில் **WFTU** என்ற வலிமைமிகு பதாகையின் கீழ் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றுபட்ட போராட்டங்கள் உலகெங்கிலும் தொடர்கின்றன.



WFTU அமைப்பின் எண்பதாண்டு நிறைவினைக் குறிக்கும் விதமாக அதன் இந்திய உறுப்பு சங்கங்கள், "உலக தொழிற்சங்க இயக்கத்தின் வரலாறு மற்றும் தற்போதைய சர்வதேச நிலைமை" என்ற தலைப்பிலான கருத்தரங்குகளை நமது நாட்டின் முக்கிய நகரங்களில் கடந்த டிசம்பர் மாதம் நடத்தின.

சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்பதற்காக உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் தோழர் ஜார்ஜ் மவ்ரிகோஸ் அவர்கள் **03-12-2024** அன்று சென்னை வந்திருந்தார். அதுசமயம், சென்னையில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்திய அலுவலகத்திற்கு தோழர் ஜார்ஜ் மவ்ரிகோஸ் அவர்கள் வருகை புரிந்தார்.





அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் தலைமையில் சம்மேளனத்தின் நிர்வாகிகள் தோழர் ஜார்ஜ் மவ்ரிகோஸ் அவர்களை சங்க அலுவலகத்தில் வரவேற்றனர்.

அப்போது, சம்மேளன நிர்வாகிகளிடையே உரையாற்றிய தோழர் ஜார்ஜ் மவ்ரிகோஸ் அவர்கள் **WFTU** அமைப்பின் வலிமை வாய்ந்த முக்கிய உறுப்பினராக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் திகழ்வதாக புகழ்ந்துரைத்தார். மேலும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் **WFTU**வின் செயல்பாடுகளை அனுசரிப்பதில் முன்னணியில் உள்ளதாகவும், தாமும் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்களும் பல்லாண்டுகளாக **WFTU** நிர்வாகக் குழுவில் ஒன்றிணைந்து செயலாற்றி வருவதில் பெருமிதம் கொள்வதாகவும் கூறினார்.



பின்னர் சென்னை **A K** நாயக் பவன் அரங்கினில் நடைபெற்ற கருத்தரங்கில் தோழர் ஜார்ஜ் மவ்ரிகோஸ் அவர்கள் எழுதிய **"CRITICAL NOTES ON THE HISTORY OF THE WORLD TRADE UNION MOVEMENT – ISSUES OF TACTICS AND STRATEGY'** என்ற நூலின் தமிழ்ப்பதிப்பினை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் **T K** ரங்கராஜன் அவர்கள் வெளியிட அதனை **AITUC** செயலாளர் தோழர் **T M** மூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் **WFTU** இணைப் பொதுச் செயலாளர் தோழர் **C** ஸ்ரீகுமார், **AITUC** சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் **S** காசி விஸ்வநாதன், **AIBEA** பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் மற்றும் **CITU** சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் **A** சௌந்தரராஜன் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர். இக்கருத்தரங்கில் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்.

உலகத் தொழிலாளர்களின் உரிமைகள், அமைதி மற்றும் சமூக நீதிக்கான போராட்டங்களைத் தொடர்வதற்கான நமது உறுதியைப் புதுப்பிப்போம்

உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் (WFTU) புத்தாண்டு வாழ்த்துக்கள்

உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (**WFTU**), உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் முற்போக்கான சிந்தனையுள்ள மக்களுக்கு தனது போர்க்குணமிக்க **2025** புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இரண்டாம் உலகப் போர் மனிதகுலத்திற்கு பேரழிவினை ஏற்படுத்திய தாக்கத்தில், பாரிஸ் நகரில், உலகெங்கிலும் உள்ள தொழிற்சங்கங்கள் அக்டோபர் 3, 1945 அன்று ஒன்றுகூடி உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தினை ஸ்தாபித்தன. உலகத் தொழிற்சங்க வரலாற்றில், தொழிலாளர்களுடைய உரிமைகள், கண்ணியம் மற்றும் சர்வதேச ஒற்றுமையைப் பேணவும், ஏகாதிபத்தியப் தலையீடுகள் மற்றும் சுரண்டல்கள் அற்ற உலகத்தினை உறுதி செய்திடுவதற்கான போராட்டங்களை முன்னெடுப்பதற்கான துவக்கமாக இந்நாள் அமைந்தது.

தொழிலாளர்களின் உரிமைகள், அமைதி மற்றும் சமூக நீதிக்கான போராட்டங்களைத் தொடர நமது உறுதியைப் புதுப்பிக்க புத்தாண்டு ஒரு வாய்ப்பாகும். முதலாளித்துவத்தின் பொருளாதார நெருக்கடிகள், உலக நாடுகளுக்கிடையே ஏகாதிபத்தியப் போர்களும் தலையீடுகளும் கடந்த ஆண்டு முழுவதும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.



பாலஸ்தீனத்தில் நடந்து வரும் இனப் படுகொலை மற்றும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அவர்களின் நட்பு நாடுகளின் ஆதரவுடன் இஸ்ரேலியப் படைகளின் ஆக்கிரமிப்பு போன்ற குற்றச் செயல்கள் பல்லாயிரக்கணக்கானோரின் மரணத்திற்கு வழிவகுத்து மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் மனிதாபிமானமற்ற, மனிதகுலத்திற்கு பேரழிவு ஏற்படுத்தும் அரசியல் மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகளின் தாக்குதல்களினால் ஏராளமான அப்பாவி மக்கள் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு அகதிகளாக துன்புற்று தங்கள் இன்னுயிரை விலையாகக் கொடுக்கின்றனர். பொருளாதாரப் போர்கள், தடைகள் மற்றும் ஏகாதிபத்திய சக்திகளின் தலையீடு இல்லாமல், மக்கள் தங்கள் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் குறித்து சுதந்திரமாகவும் ஜனநாயக ரீதியாகவும் முடிவெடுக்கும் உரிமைக்காகவும், அமைதி மற்றும் சமூக நீதிக்காகவும் உலகத் தொழிற் சங்கங்களின் சம்மேளனம் போராட்டங்களைத் தொடர்கின்றது.

முதலாளித்துவ நெருக்கடிகளின் காரணமாக ஊதியங்கள் மற்றும் சமூக உரிமைகள் மீது பேரழிவுத் தாக்குதல்களை தொழிலாளர்கள் எதிர்கொள்கின்றனர். வேலைநிறுத்தம் செய்யும் உரிமை, கண்ணியமான வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளைப் பெறுவதற்கான உரிமை உள்ளிட்ட தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான தாக்குதல்களை முதலாளிகள், மிகப் பெரிய பன்னாட்டு ஏகபோகங்கள் மற்றும் அரசாங்கங்கள் தீவிரப்படுத்தி வருகின்றன.

முதலாளித்துவ நெருக்கடியை எதிர்த்து, தொழிற்சங்கம், சமூக மற்றும் அரசியல் உரிமைகளைப் பாதுகாத்து, சமகாலத் தேவைகளை அடைவதற்கு, வர்க்கத் தொழிற்சங்கங்கள் வழிகாட்டும் போராட்டப் பாதை ஒன்றே தொழிலாளர்கள் முன் உள்ள வழியாகும் என்று **WFTU** நம்புகின்றது.

2025ம் ஆண்டிற்கான தொழிலாளர்களின் சமரசமற்ற கோரிக்கைகளாக கீழ்க்கண்டவற்றை **WFTU** பிரகடனப்படுத்துகின்றது:

கணிசமான ஊதிய உயர்வு மற்றும் முழு உரிமைகளுடன் கூடிய நிலையான வேலை வாய்ப்பு.

ஊதியக் குறைப்புகள் இல்லாத 35 மணி நேர வேலை வாரம்.

தரமான பொது சுகாதாரம், கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைப்பில் தொழிலாளர்களுக்கு உலகளாவிய உரிமை.

அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணியிடங்கள்.



2025 புத்தாண்டு, உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (**WFTU**) நிறுவப்பட்ட எண்பதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. **WFTU** அமைப்பின் புகழ்பெற்ற **80** ஆண்டு வரலாற்றின் நிறைவை நினைவுகூரும் வகையில் இந்த ஆண்டு முழுமையும் **WFTU**வின் உறுப்பு சங்கங்கள் எண்ணற்ற போராட்ட செயல்திட்டங்களை அனுசரிக்க உள்ளது. எண்பதாவது ஆண்டு நிறைவினை அனுசரிக்கும் இத்தருணத்தில் **WFTU** அமைப்பின் அறைகூவல்களை சிறப்பாக செயல்படுத்திவரும் தொழிற்சங்கங்கள் மற்றும் தோழர்களின் போராட்டங்களையும் தியாகங்களையும் நன்றியுடன் போற்றுவோம்.

WFTUவின் இந்த வரலாற்று மைல்கல் ஒரு கொண்டாட்டம் மட்டுமல்ல. உலகின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள தொழிலாளர்களுடைய போர்க்குணமிக்க ஒற்றுமையினை மேலும் உறுதிப்படுத்தி, சுரண்டல், ஒடுக்குமுறை மற்றும் ஏகாதிபத்திய தலையீடுகளை தொடர்ந்து எதிர்க்கும் சர்வதேச வர்க்கப் போராட்டத்தில் **WFTU**வின் பங்கை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

2025 புத்தாண்டினை வரவேற்கும் அதே வேளையில், உலகெங்கிலுமுள்ள தொழிற்சங்க இயக்கங்கள் மற்றும் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு உறுதியேற்று, போராட்டங்கள் மற்றும் வெற்றிகள் நிறைந்த மகிழ்ச்சியான மற்றும் போர்க்குணமிக்க புத்தாண்டு நல்வாழ்த்துக்களை உலகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் (**WFTU**) தெரிவித்துக் கொள்கின்றது

இளம் உறுப்பினர்களுக்கான தொழிற்சங்கப் பயிலரங்கம்,சென்னை- 20-12-2024

சமீப காலங்களில் வங்கியில் இணைந்த புதிய இளம் உறுப்பினர்களுக்கு தொழிற்சங்கப் பயிற்சி அளிக்கும் நோக்கில் இளம் தோழர்களுக்கான தொழிற்சங்கப் பயிலரங்கம் ஒன்றினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கடந்த டிசம்பர் மாதம் 20ஆம் நாளன்று சென்னையில் ஏற்பாடு செய்திருந்தது.

இப்பயிலரங்கில் தமிழ்நாடு முழுவதிலிமிருந்தும் வங்கிவாரி சங்கங்களிலிருந்து இளைஞர்கள் மற்றும் பெண் தோழர்கள் உட்பட நூற்று முப்பது உறுப்பினர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் இப் பயிலரங்கில் பங்கேற்று வகுப்புகளை துவக்கிவைத்தார். 1946ம் ஆண்டு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் துவக்கப்பட்ட காலத்திலிருந்து பல்வேறு காலகட்டங்களில் ஏராளமான போராட்டங்களை சந்தித்து, எவ்வாறு வலிமை வாய்ந்த தொழிற்சங்கமாக உருவெடுத்தது என்பதை விரிவாக எடுத்துரைத்தார்.



தோழர் பர்வானா, தோழர் பிரபாத்கர் போன்ற ஒப்பற்ற தலைவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக வங்கி நிர்வாகங்களின் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு உள்ளானபோதும் அத்தகைய அடக்குமுறைகளை துச்சமென நினைத்து, எவ்வாறு அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தினைக் கட்டமைத்து, வங்கி ஊழியர்களின் பணிவிதி முறைகள் மேம்பட தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தனர் என்று விரிவாக கூறினார்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தனது உரையில், வங்கித்துறை தற்போது சந்திக்கும் சவால்களைப் பற்றியும் அவற்றை இளம் உறுப்பினர்கள் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பது குறித்தும் விளக்கினார்.


மேலும், சமீப காலத்தில் வங்கிப்பணியில் சேர்ந்துள்ள இளம் தோழர்களுக்கு தொழிற்சங்க இயக்கம் மற்றும் தொழிலாளர்களுடைய உரிமைகள் குறித்த பயிற்சி அளிப்பதற்காக சம்மேளனம் இது போன்ற பயிலரங்கங்களை தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் நடத்துகின்றது என்றும் இவற்றில் பங்கேற்று தோழர்கள் மிகுந்த பயன் பெறுகின்றனர் என்றும் கூறினார்.

பின்னர் உரையாற்றிய, தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் தோழர் **S D** சீனிவாசன் அவர்கள் வங்கி ஊழியர்களுக்கான ஒழுங்கு நடவடிக்கை முறைகள் குறித்து விரிவாக விளக்கினார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் முயற்சிகள் வாயிலாக இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலம் வங்கி ஊழியர் பெற்றுள்ள பணிப் பாதுகாப்பு நடைமுறைகளை நம் சங்கப் பொறுப்பாளர்கள் முறையாகப் பயின்று, ஊழியர்களுக்கு எதிரான, வங்கி நிர்வாகங்களின் ஒழுங்கு நடவடிக்கைகளிலிருந்து எவ்வாறு உறுப்பினர்களை பாதுகாக்க வேண்டும் என்று தோழர் **S D** சீனிவாசன் அவர்கள் விளக்கிக் கூறினார்.

பயிலரங்கின் இறுதியில் உரை நிகழ்த்திய தோழர் **V** இரகுராமன் அவர்கள், இதனைப் போன்ற



பயிலரங்கங்களில் இளம் உறுப்பினர்கள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களை தொழிற்சங்கப் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, எதிர்கால தலைவர்களாக உருவாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இப்பயிலரங்கில் பங்கேற்ற பல பிரதிநிதிகள், இதனைப் போன்ற தொழிற்சங்க வகுப்புகளில் பங்கேற்பது தொழிற்சங்க இயக்கத்தில் பணியாற்றும் இளைய தோழர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும், எதிர்வரும் நாட்களில் மேலும் பல்வேறு பயிற்சி வகுப்புகளை சம்மேளனம் நடத்திடவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தனர்.

நாமக்கல் மாவட்ட வங்கி ஊழியர் சங்க மூன்றாவது மாநாடு - 22-12-2024

நாமக்கல் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மூன்றாவது மாநாடு கடந்த டிசம்பர் மாதம் 22ம் தேதி நாமக்கல் நகரில் எழுச்சியுடன் நடைபெற்றது. நாமக்கல் மாவட்டத்தில் பணியாற்றும் 250ற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டின் துவக்கத்தில், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் சங்கக் கொடியை ஏற்றி வைத்தார்.

மாவட்ட வங்கி ஊழியர் சங்கத் தலைவர் தோழர் P பிரபாகரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம், அவர்கள் துவக்கி வைத்தார். மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் தோழர் T ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.



தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் G வைரப்பன், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினர் தோழர் J விஜயலட்சுமி ஆகியோர் மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

மாநாட்டில் துவக்கவுரை ஆற்றிய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் தன்னுடைய உரையில், ஒன்றிய அரசின் பொதுத்துறை விரோத நடவடிக்கைகளை கண்டித்ததுடன், இதனை எதிர்த்து மேலும் தீவிரமாகப் போராட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினார்.

பொதுத்துறை வங்கிகளில் பெருமளவில் உள்ள எழுத்தர் மற்றும் துணைநிலை ஊழியர் காலிப் பணியிடங்களை நிரப்பிட வலியுறுத்தி அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் விரைவில் அறிவிக்கவிருக்கும் போராட்டங்களில் மாவட்டத்திலுள்ள உறுப்பினர்கள் முழு அளவில் கலந்துகொள்ள வேண்டுகோள் விடுத்தார்.





தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **G** வைரப்பன் அவர்கள் மாநாட்டினை வாழ்த்திப் பேசுகையில், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் அறிவிக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் மற்ற வணிக வங்கி ஊழியர்களுடன் ஒன்றிணைந்து பங்கேற்பதைக் குறிப்பிட்டு பாராட்டினார்.

மாநாட்டின் இறுதியில், தோழர் **V** கிருஷ்ணசாமி (யூகோ வங்கி) அவர்கள் தலைவராகவும், தோழர் **L** வெங்கடசுப்ரமணியன் (யூனியன் வங்கி) அவர்கள் பொதுச் செயலாளராகவும், தோழர் **M** குமாரசாமி (கரூர் வைசியா வங்கி) அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள நாமக்கல் மாவட்ட வங்கி ஊழியர் சங்கப் பொறுப்பாளர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

திருவண்ணாமலை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் ஏழாவது மாநாடு - 01-12-2024

திருவண்ணாமலை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் 7வது மாநாடு கடந்த **01.12.2024** அன்று செய்யார் நகரில் நடைபெற்றது. மாநாட்டு அரங்கிற்கு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் மூத்த தலைவரான மறைந்த தோழர் ஆர் கோதண்டன் அவர்களின் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

நமது மாநில சங்கத்தின் பொதுச் செயலாளர் மாநாட்டு கொடியினை ஏற்றி வைக்க மாநாட்டு நிகழ்ச்சிகள் இனிதே துவங்கின. சங்கத்தின் தலைவர் தோழர் எஸ்.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற துவக்க விழா நிகழ்ச்சியில் அச்சங்கத்தின் நிர்வாகிகளில் ஒருவரான தோழர் டி.தணிகைவேல் அவர்களின் புதல்வி டி செண்பகவள்ளி ஏற்பாடு செய்திருந்த நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரையாற்றிய அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் சி.எச்.வெங்கடாசலம் அவர்கள் நாடெங்கும் வங்கித் துறையும், வங்கி ஊழியர்களும் எதிர்கொண்டுவரும் பிரச்சனைகளை விளக்கியதுடன், கூட்டுறவு வங்கிகள் ஆற்றிவரும் சீரிய பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பாதாகையின் கீழ் செயல்பட்டுவரும் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் தற்போது ஊதியம் மற்றும் பணிவரன் நிலைகளில் அடைந்துள்ள முன்னேற்றங்களுக்கு தனது பாராட்டுகளை தெரிவித்தார். நமது மாநில சங்கத்தில் திருவண்ணாமலை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் ஆற்றிவரும் பெரும் பங்கிற்கு தனது பாராட்டுகளை தெரிவித்தார்.



இம்மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் இ அருணாச்சலம் அவர்கள் அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராக இருந்து மறைந்த நமது தலைவர் தோழர் பி.பாலகிருஷ்ணன் ஆற்றிய பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய கோரிக்கைக்கு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் தனது முழு ஆதரவை அளிப்பதுடன் இக்கோரிக்கைக்காக வேலைநிறுத்தம் உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் தமிழகத்திலுள்ள வணிக வங்கி ஊழியர்கள் பங்கேற்பார்கள் என்றும் தெரிவித்தார்.

மாநாட்டில் சிறப்புரையாற்றிய **தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் G வைரப்பன்** அவர்கள் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகள் குறித்து விளக்கியதுடன் இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண நமது மாநில சங்கம் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளத்தின் தலைமையை கலந்தாலோசித்து போராட்ட நடவடிக்கையில் ஈடுபடுமென்று அறிவித்தார்.

இம்மாநாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத் தலைவர்கள் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். மாநாட்டின் முடிவில் திருவண்ணாமலை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவராக தோழர் டி.பூமிநாதன், செயல் தலைவராக தோழியர் கே.விஜயா, பொதுச் செயலாளராக தோழர் எம்.யுவராஜ், செயலாளராக தோழர் ஜி.சண்முகம், பொருளாளராக தோழர் டி.ஜெயவேல் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நம் தலைவர்களின் தியாக வரலாற்றினைப் போற்றி நினைவு கூர்வோம்



தோழர் P பாலகிருஷ்ணன்

முன்னாள் பொதுச் செயலாளர்
அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனம்

முன்னாள் தலைவர்
தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

முன்னாள் மத்தியக் குழு உறுப்பினர்
அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம்

7ம் ஆண்டு நினைவு தினம்
10 ஜனவரி 2025

நமது இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர்களில் ஒருவரான தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் கடந்த **10-01-2018** அன்று நம்மை விட்டுப் பிரிந்திடினும், வங்கி ஊழியர் நெஞ்சங்களில் என்றென்றும் நீக்கமற நிறைந்துள்ளார்.

தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள், அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவராகவும், மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினராகவும் நாற்பதாண்டு காலத்திற்கும் மேலாக பொறுப்பேற்று, வங்கி ஊழியர் இயக்கத்திற்கும், குறிப்பாக கூட்டுறவு வங்கி ஊழியர் பணி விதி மேம்பாட்டிற்காகவும் தன்னுடைய வாழ்நாள் முழுமையும் அர்ப்பணித்தவர்.

தன்னுடைய கல்லூரி நாட்களிலேயே, மாணவர் இயக்கத்தில் தீவிரமாக பணியாற்றிய தோழர் பாலகிருஷ்ணன் அவர்கள் **1966** ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் பணியில் சேர்ந்தார். கூட்டுறவு வங்கிகளில் தொழிற்சங்க இயக்கம் முழுமையாக கட்டமைக்கப்படாத அன்றைய காலகட்டத்தில், தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் தொழிற்சங்க இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடத் துவங்கினார்.

வங்கி ஊழியர் இயக்கத்தின் ஒப்பற்ற தலைவர்களான தோழர் N சம்பத் மற்றும் தோழர் C S சுப்ரமணியம் ஆகியோரின் தலைமைப் பண்புகளால் பெரிதும் ஈர்க்கப்பட்ட தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள், மறைந்த தோழர் V P சீனிவாசன் அவர்களுடன் இணைந்து பணியாற்றி, தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கி ஊழியர்களை தொழிற்சங்கத்தில் இணைத்து சங்கத்தினை பலப்படுத்துவதை தன் முழு முதல் பணியாக மேற்கொண்டார்.

அவரது அயராத உழைப்பால், இன்று தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கி ஊழியர்கள் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மிகவும் போர்க்குணமிக்க அமைப்பாக பரிமளிக்கின்றனர்.

கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு அகில இந்திய அளவில் சங்கம் நிறுவிட **AIBEA** முடிவு செய்து, **1987**இல் அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனம் தோற்றுவித்த நாள் முதற்கொண்டு **AICBEF**ன் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட தோழர் பாலகிருஷ்ணன் தனது இறுதி மூச்சு வரை அப்பொறுப்பில் திறம்பட பணியாற்றி, கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பணிநிலை மேம்பாட்டிற்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டார்.

அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தினை பெரும்பான்மையான கூட்டுறவு வங்கி ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு மிகப் பெரிய அமைப்பாக தோழர் **P** பாலகிருஷ்ணன் உருவாக்கினார். தோழர் தாரகேஷ்வர் சக்ரவர்த்தி, தோழர் **N** சம்பத், தோழர் சுஷில் கோஷ் மற்றும் தோழர் **C H** வெங்கடாசலம் ஆகிய தலைவர்களுடன் நெருங்கிப் பணியாற்றி நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு வங்கி ஊழியர்களை ஒன்றிணைத்து கூட்டுறவு வங்கி ஊழியர் இயக்கத்தினை வலுப்படுத்தி, கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஒப்பற்ற தலைவராக உருப்பெற்றார்.



நமது நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கி அமைப்பினை துடிப்புமிக்கதாகவும், கூட்டுறவு அமைப்பிற்கு புத்துயிர் அளித்திடவும் தோழர் பாலகிருஷ்ணன் அவர்கள் பல்வேறு செயல்திட்டங்களை அறிவித்துப் போராடினார்.

நலிவுற்றிருந்த சிறிய கூட்டுறவு வங்கிகளை சீரமைத்திடவும், வைத்தியநாதன் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்திடவும் அவர் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிகள் கூட்டுறவு வங்கிகளுக்கு மறுமலர்ச்சியினைப் பெற உதவியது.

தோழர் **P** பாலகிருஷ்ணன் அவர்கள் தனது நேரத்தையும் ஆற்றலின் பெரும் பகுதியையும் கூட்டுறவுத் துறையின் மறுமலர்ச்சிக்காக செலவிட்டாலும், வங்கித்துறை மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் செயல்பாடுகளில் முழுமையான ஈடுபாடு கொண்டு பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் எல்லைக்குள் தன்னை சிறைப்படுத்திக் கொள்ள அவர் ஒருபோதும் தன்னை அனுமதிக்கவில்லை. மாறாக, வங்கி ஊழியர்களின் இயக்கம் மற்றும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பதாகையின் கீழ் வங்கி ஊழியர்களின் பொது இயக்கத்துடன் எப்போதும் தன்னைப் பிணைத்துக்கொண்டு தொழிற்சங்கப் பணியாற்றினார்.

நமது இயக்கத்திற்கு அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், 2014ல் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவராக தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு மாநில சம்மேளனத்தின் தலைவராக கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டது அதுவே முதன்முறையாகும்.

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினராகப் பணியாற்றி, சங்கத்தின் நடவடிக்கைகளில் தீவிரமாக பங்கேற்றார். பணிவான குணங்கள் தோழர் P பாலகிருஷ்ணன் அவர்களை இயக்கத்தின் முன்னோடித் தலைவர்களுடனும், அவரது அன்பும், பாசமும், அனைத்து தோழர்களுடனும் மிகவும் ஒன்றிணைந்து இயக்கப் பணிகளில் ஈடுபடவைத்தது.



கூட்டுறவு வங்கி ஊழியர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக விளங்கிய தோழர் P பாலகிருஷ்ணன் அவர்கள் நாடு முழுவதும் உள்ள வங்கி ஊழியர்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு பக்கபலமாகவும், அரசாங்க மட்டத்தில் கோரிக்கைகளை திறம்பட வலியுறுத்துவதில் தனித்துவமான திறமை உள்ளவராகவும் திகழ்ந்தார்.

இலட்சக்கணக்கான கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய தோழர் பாலகிருஷ்ணன், கூட்டுறவு வங்கி ஊழியர்கள் ஓய்வூதிய உரிமை பெற இடைவிடாத முயற்சி செய்தார். கூட்டுறவு வங்கி ஊழியர்கள் இயக்கத்திற்கு அவரது வாழ்நாள் பங்களிப்பால் தோழர் P பாலகிருஷ்ணன் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நம்பிக்கைகளின் அடையாளமாக திகழ்ந்தார்.

தோழர் P பாலகிருஷ்ணன் அவர்களுடைய தொழிற்சங்க வாழ்க்கை மற்றும் அர்ப்பணிப்பு என்றென்றும் வங்கி ஊழியர்களுக்கு ஊக்கமளிக்கும். தோழர் P பாலகிருஷ்ணனின் அவர்களின் நினைவு நாளில், தமிழக கூட்டுறவு வங்கி ஊழியர்களின் தொழிற்சங்க இயக்கத்தை மென்மேலும் வலுப்படுத்த நமது முயற்சிகளை தீவிரப்படுத்துவோம் என்று உறுதி ஏற்போம்.



புதுப்பிக்கப்பட்ட

‘தாரக் இல்லம்’ திறப்பு விழா

அமீர்ஜான் தெரு - சூளைமேடு - சென்னை

நாள்: **08-01-2025** நேரம்: காலை **9** மணி

தலைமை

தோழர் C H வெங்கடாசலம் - பொதுச் செயலாளர் - AIBEA

சிறப்பு விருந்தினர்கள்

தோழர் E அருணாசலம் - பொதுச் செயலாளர் - TNBEF

தோழர் S D சீனிவாசன் - இணைச் செயலாளர் - AIBEA

தோழர் K ஸ்ரீகிருஷ்ணா - பொருளாளர் - AIBEA

அன்புடன் அழைக்கும்

சென்ட்ரல் வங்கி ஊழியர் சங்கம் – தமிழ் நாடு

வங்கிகளில் வாராக் கடன் தள்ளுபடி

இந்திய பொருளாதாரத்திற்கு வளர்ந்து வரும் ஆபத்து

கடந்த ஐந்து வருடங்களில் மட்டும்

ரூபாய் ஐந்து இலட்சம் கோடி கடன் தொகை தள்ளுபடி



LOANS WRITTEN OFF BY PUBLIC SECTOR BANKS

Bank	FY 2020-21	FY 2021-22	FY 2022-23	FY 2023-24	FY 2024-25* (till 30.9.2024) In 6 months
Bank of Baroda	14,782	17,967	17,998	10,518	5,925
Bank of India	8,815	10,443	8,694	9,987	2,316
Bank of Maharashtra	4,931	3,118	1,491	990	487
Canara Bank	7,642	8,210	4,472	11,827	5,088
Central Bank of India	5,992	1,236	10,258	10,001	68
Indian Bank	8,371	8,347	7,952	8,734	2,928
Indian Overseas Bank	4,618	3,769	3,412	7,179	621
Punjab and Sind Bank	71	1,134	2,283	796	944
Punjab National Bank	15,877	18,312	16,578	18,317	8,061
State Bank of India	34,402	19,666	24,061	16,161	8,312
UCO Bank	9,410	3,851	2,575	1,938	941
Union Bank of India	16,983	19,484	19,175	18,264	6,344
	131,894	115,537	118,949	114,712	42,035

Rs. in crores

Source : Reply in Parliament

வாராக் கடன் வசூல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்து !

வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாத மோசடிப் பேர்வழிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து கடனை வசூல் செய் !

வங்கிக் கடன் கொள்கையில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய் !

பொதுமக்கள் சேமிப்பினை பாதுகாக்க உறுதி ஏற்போம் !